பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 169

வியாழக்கிழமை
15 மே 2025

வைகாசி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பாடசாலைகளில்
பாலியல் குற்றமா?
அழைக்கவும்
1929
11



24 பேரைக் காவுவாங்கிய

## இறம்பொடவில் நேற்றும் ஹைஏஸ் கவிழ்ந்து விபத்து

17 பேருக்குப் படுகாயம்!

கொழும்பு, மே 15
இறம்பொட, கெரண்டியெல்ல பேருந்து விபத்து நடந்த இடத்துக்கு அருகாக, நேற்று மாலை ஹைஏஸ் வாகனமொன்றும் தடம்புரண்டு பள்ளத்துக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.
11

பெரும் எதிர்பார்ப்புக்குள்

## செம்மணி மயானத்தில் இன்று அகழ்வுப்பணி!

யாழ்ப்பாணம், மே 15
அரியாலை - செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் இன்று அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
துறைசார் வல்லுநர் பேராசிரியர் சோமதேவ தலை
11

இறுதிப்போரின் போது

# இனப்படுகொலை நிகழவேயில்லை!

அநுர அரசாங்கம் அறிவிப்பு
கனடாவுக்கும் கண்டனம்!

கொழும்பு, மே 15
இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரின்போது, இனப்படுகொலை இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பொய்யானது என்று ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்துள்ளது.
11



இனப்படுகொலை தொடர்பில்

## கனடாவின் குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை!

அரசோடு ஒத்தூதுகின்றார் அலி சப்ரி
11

## ஆனையிறவு உப்பளத்தில் பணியாளர்கள் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, மே 15
ஆனையிறவு தேசிய உப்பளத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.
தமது போராட்டம் தொடர்பில் அவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-
ஆனையிறவு தேசிய உப்பளத்தில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளை நாங்கள்
11

ஆனையிறவு

## உப்பளத்தில் தற்போது உப்பு உற்பத்தி இல்லை!

இயந்திரத்தில் தொழில்நுட்பப் பழுது
போட்டுடைத்தார் இளங்குமரன் எம்.பி.

கிளிநொச்சி, மே 15
ஆனையிறவு உப்பளம் தற்போது இயங்கவில்லை. உப்பளத்தின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து உபகரணங்களையும், தொழில்நுட்ப உதவிகளையும் கோரியுள்ளோம் இவ்வாறு
11

புரச்சந்தி புராளி



'அப்ப உப்பே இல்லாத உப்பளத்தைத்தான் இவையள் திறந்து படம் காட்டினவையோ?'



## புங்குடுதீவு ஆலயத்தில் 10லட்சம் ரூபா திருட்டு!

யாழ்ப்பாணம், மே 15
புங்குடுதீவில் உள்ள ஆலயமொன்றில் அண்ணளவாக 10 லட்சம் ரூபா திருடப்பட்ட நிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் இரு
11

## 267 சபைகளிலும் ஆட்சியமைப்போம்

மக்களாணையுடன் விளையாடாதீர்
ஜனாதிபதி அநுரகுமார எச்சரிக்கை

கொழும்பு, மே 15
தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்ற 267 சபைகளிலும் நிச்சயம் நாம் ஆட்சியமைப்போம். மக்கள் வழங்கிய ஆணைக்கு புறம்பாக எவரேனும் செயற்பட முற்பட்டால், அத்தகைய சவாலையும் அனைத்து
11

## ஆனையிறவில் ஹைஏஸ் தடம்புரண்டு விபத்து!

இருவருக்குக் காயம்



கிளிநொச்சி, மே 15
கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில், நேற்று மாலை ஹைஏஸ் ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.
11



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4071 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 03 15 18 75 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1138 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 32 39 47 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0097 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 6 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2177 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 20 41 61 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5829 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 4 0 6 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1859 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 33 40 49 79 |
| விசேட எழுத்து | E |

# கனடாவில் அமைத்த நினைவுத்தூபி நல்லிணக்கத்தைப் பாதிக்குமாம்!

## பொங்குகிறார் நாமல் ராஜபக்ச

கொழும்பு, மே 15

**கனடா, தமிழினப்படுகொலை நினைவுச்சின்னம் ஒன்றை நிர்மாணித்துள்ளமை கவலைக்குரியது. இலங்கை அரசாங்கம் கொழும்பில் உள்ள கனேடியத் தூதுவரை அழைத்து, முறையாக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைதி மற்றும் ஒற்றுமையை நோக்கிச் செயற்படுவதற்குப் பதிலாக, இந்தக் குழுக்கள் தங்கள் சொந்தநலன்களுக்காகப் பிரிவினையைத்தூண்டிவிடுகின்றன. இது உண்மையான நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் கனடாவின் நம்பகத்தன்மையைக் குறை மதிப்புக்கு உட்படுத்தும்.

இலங்கை இராணுவம், விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுத்த மோதலில் எந்த இனப்படுகொலையும் சர்வதேச சட்டத்துக்கமைய நிரூபிக்கப்பட வில்லை. ஒரு சட்டபூர்வமான போரின் பின்னணியில் ஒரு தவறான இனப்படுகொலைக் கதையை ஊக்குவிப்பது- வரலாற்றைத் திரிபுபடுத்துவது மட்டுமல்லாமல், இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறைக்குக் கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும். இந்த விடயத்தில் அரசாங்கம் தீர்க்கமாகச் செயற்படத் தவறுமாயின் அது ஆயுதப் படைகள், நாட்டின் இறையாண்மை மற்றும் மக்களுக்கு ஓர் அவமானமாக அமையும் - என்றார். (எ-இ)



# தமிழினப் படுகொலை நினைவு ஊர்திப்பவனி

யாழ்ப்பாணம், மே 15

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், நல்லூர் தியாகதீபம் திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை ஊர்திப்பவனியொன்று ஆரம்பமாகியது.

குறித்த ஊர்திப்பவனி வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக முள்ளி வாய்க்காலை சென்றடையவுள்ளது.

"தமிழினப் படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணைவேண்டும், தேசம், இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி வேண்டும்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளும் இறுதிப்போரின் சாட்சியங்கள் குறித்த படங்களும் வாகனத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ச-25,20,66,17)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 14.05.2025 | புதன்கிழமை | 0537 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| K | 2 5 6 3 8 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.05.2025 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2803 | M | 09 12 56 72 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 10 32 40 54 | 4964 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.05.2025 | புதன்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 13 45 51 59 | 4515 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 14.05.2025 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| T | 07 | 02 03 19 26 | 1979 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 51 53 65 71 | 2629 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 14.05.2025 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 22 24 41 67 | 2126 |

# இம்யூனோகுளோபுலின் மோசடி விசாரிப்பதற்கு நீதிபதிகள் குழு

கொழும்பு, மே 15

இம்யூனோகுளோபுலின் மருந்துப் பரிவர்த்தனை வழக்குத் தொடர்பாக பரிசீலிக்க, சட்டமா அதிபரால் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# புதிய திருத்தந்தையை சந்தித்தார் மல்கம்!

கொழும்பு, மே 15

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் , புதிதாக நியமிக்கப்பட்ட ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப்பாண்டவர் லியோ 14ஐ நேற்று முன்தினம் சந்தித்தார்.

இலங்கையின் கொழும்பு பேராயரான கர்தினால் மல்கம் ரஞ்சித் மறைந்த போப்பாண்டவர் பிரான்சிஸ்க்குப் பின்னர் அப்போஸ்தலிக்க சிம்மாசனத்துக்கு நியமிக்கப்பட்டவர்களில் ஒருவராவார்.

புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பதற்கான வத்திக்கான் நகரில் உள்ள வத்திக்கான் அரண்மனையில் நடைபெற்ற கர்தினால்களின் கூட்டத்திலும் அவர் பங்கேற்றார் என்பது குறிப்பி டத்தக்கது. (ச-இ)

# நீண்டதூர சேவை பஸ்களில் ஆய்வு மேற்கொள்ளப் பணிப்பு



கொழும்பு, மே 15

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பஸ்களில் சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும், மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் பதில் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பஸ்களால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், பஸ்களில் சிறப்புச் சோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் பாவனையில் வாகனம் ஓட்டுதல், கவனக்குறைவாகவும் ஆபத்தானதாகவும் வாகனம் ஓட்டுதல் போன்ற போக்குவரத்துக் குற்றங்கள் தொடர்பாகக் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# 12 நாள்களில் டெங்கு 2,178

## ஒழிப்பு வாரம் பிரகடனம்

**கொழும்பு, மே 15**

**நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலையைத் தொடர்ந்து நாளாந்தம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துவருகின்றது என்று டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

அந்தவகையில் இவ்வருடத்தின் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே 12 திகதி வரையான காலப்பகுதியில் சுமார் 19 ஆயிரத்து 724 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் நாட்டில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அத்துடன் அந்த மாதத்தில் மாத்திரம் சுமார் 5 ஆயிரத்து 175 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இம்மாதத்தின் கடந்த 12 நாள்களில் 2 ஆயிரத்து 178 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நுளம்புகளால் பரவும் மற்றொரு வைரஸ் நோயான சிக்கன்குனியாவால் பலரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். நுளம்புகள் மற்றும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சால் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் விசேட டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# கூகுள் 'அப்டேட்'

வொஷிங்டன், மே 15

கூகுள் நிறுவனம் தனது 'கூகுள் தேடல்' செயலியில் உள்ள 'ஜி' லோகோவைக் கடந்த 10 ஆண்டுகளில் முதல் முறையாக புதுப்பித்துள்ளது.

இதற்கு முன்பு சிவப்பு, மஞ்சள், பச்சை மற்றும் நீலம் என நான்கு வண்ணங்களும் தனித்தனியே இருந்தன. தற்போது இந்த 4 வண்ணங்களும் ஒன்றோடு ஒன்றாகக் கலந்து காணப்படுகின்றன. (ச-இ)

# இலங்கைக்கு வந்தது இறக்குமதி உப்பு

கொழும்பு, மே 15

நாட்டில் ஏற்பட்டுள்ள உப்புத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் அரசாங்கத்தால் இறக்குமதிசெய்யப்பட்ட ஒரு தொகுதி உப்புடன் கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளதாவது:-

இறக்குமதி செய்யப்பட்ட உப்புக் கையிருப்புகள் விரைவில் நமக்குக் கிடைக்கப்பெற்றால், நிலைமை சீரடையும். உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள உப்புப் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு கிட்டும்- என்றார். (எ-இ)

# உயிரைப் பறிக்கும் உயர்குருதி அழுத்தம்

கொழும்பு, மே 15

இலங்கையில் ஏற்படும் மொத்த மரணங்களில் 70 சதவீதம், உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் நோய்களால் நிகழ்கின்றன என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரிவின் விசேட மருத்துவர் சமிந்தி சமரக்கோன் கூறுகையில், 2021ஆம் ஆண்டு தொற்றா நோய்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், நாட்டுமக்களில் 34.8 சதவீதமானோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் 64 சதவீதமானோர் இதற்கு எவ்வித மருந்துகளையும் பயன்படுத்தவில்லை - என்றார். (ச-இ)



# சகோதரர்கள் நால்வரை காவுகொண்டது கடல்

கொழும்பு, மே 15

நீர்கொழும்பு வென்னப்புவப் பகுதியில் உள்ள கடலில் நீராட சென்ற நான்கு இளைஞர்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என வென்னப்புவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

நான்கு இளைஞர்களும் ஒன்றாக இணைந்து கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது கடலலையில் அள்ளுண்டு சென்ற நிலையில் நால்வரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் 17, 19, 18, 27 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# விசேட பொலிஸ் குழு கொத்மலைக்குப் பயணம்

கொழும்பு, மே 15

கொத்மலைப் பொலிஸ் பிரிவின் கரடிஎல்லப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேருந்து விபத்துக் குறித்து விசாரிக்க பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் நியமிக்கப்பட்ட குழுவின் அதிகாரிகள், பேருந்து விபத்து நடந்த இடத்தையும், விபத்தில் சிக்கிய பேருந்தையும், கொத்மலைக்குச் சென்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆய்வுசெய்தனர். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, பிரதிப் பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி ருவான் குணசேகர உள்ளிட்ட குழுவினர், பேருந்து விபத்து நடந்த இடத்தை ஆய்வு செய்து, பின்னர் கொத்மலைப் பொலிஸ் நிலையத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

கலியாண வீடெண்டால் நான்தான் மாப்பிள்ளையா இருக்கோணும், செத்தவீடெண்டாலும் நான் தான் சவமா இருக்கோணும் எண்ட மனநிலை இஞ்ச கன பேருக்கு இருக்கு. முந்தி அரசியல்வாதியளிட்டையும், அதிகாரியளிட்டையும் இருந்த இந்த வருத்தம் இப்ப மதகுருமார் சிலருக்கும் தொத்தத் தொடங்கியிருக்காம். அதிலையும் எங்கட இனத்தின்ர வலியைச் சொல்லுற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலகூட சிலர் தாங்கள்தான் தலைப்பா கட்டி, முன்னுக்கு நிண்டு செய்யோணும் எண்டு அடம்பிடிக்கிறதால, உள்ளுக்க லேசா குழப்பமாம்.

இனப்படுகொலை நடந்துமுடிஞ்ச பிறகு, செத்தவைக்காக அழுகிறதுக்கும், அவையின்ர சாவுக்கு நீதி கேக்கிறதுக்கும் மஹிந்த அரசாங்கம் விடேலை. அதால முதல் மூண்டு வருசமும் ஒளிச்சுமறைச்சு, ஏதும் கோயில் வழிபாடுகள் மாதிரித்தான் தெட்டம் தெட்டமா நினைவேந்தல் நடந்தது. நாலு வருசத்துக்குப் பிறகுதான் முள்ளிவாய்க்காலில சில இடங்களை ஆமி கைவிட்டது. அதுக்குப் பிறகுதான், முதல்முறையா எங்க இனப்படுகொலை நடந்ததோ அதே முள்ளிவாய்க்காலில 2013 ஆம் ஆண்டு நினைவேந்தல் நடந்தது. அப்பகூட ஆமியும், அரசாங்கமும் அஞ்சலி செய்தால் ஆய்க்கினை குடுப்பினம் எண்ட பயத்தில, முள்ளிவாய்க்காலில இருந்த சேர்ச்சில, கூட்டுப்பிரார்த்தனை மாதிரித்தான் இந்த நினைவேந்தலை ஒழுங்கு செய்தவை. பிறகுதான் மெல்லமெல்ல எங்கட ஆக்களுக்குத் துணிவு வந்து, இப்ப முள்ளிவாய்க்கால் தூபி இருக்கிற இடத்தில பொதுவான நினைவேந்தலைச் செய்ய வெளிக்கிட்டவை. மஹிந்த அரசாங்கம் கவிண்டு, நல்லாட்சி அரசாங்கம் வந்தபிறகு கெடுபிடி கொஞ்சம் குறைஞ்சதாலையும், மாகாணசபைக்காரர் நினைவேந்தலை பொறுப்பெடுத்துச் செய்ததாலையும் பிரச்சினையள் பெரிசா வரேலை. அதுக்குப் பிறகு அங்க முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில விசாரணை, கண்காணிப்பு எண்டு சின்னச் சின்ன கெடுபிடியள் இருந்தாலும், நிகழ்வை நடத்தாமல் விடக்கூடியளவு பிரச்சினையள் நடேக்கேலை.

ஆனால் எங்கட ஆக்கள்தான் இந்த நிகழ்வை ஆர் முன்னுக்கு நிண்டு செய்யிறது எண்டு கனகாலமா பிடுங்குப்பட்டுக் கொண்டிருக்கினம். ஒருக்கா மாகாண சபைக்காரர் தாங்கள்தான் இதைச் செய்யோணும் எண்டிச்சினம், பிறகு கம்பஸ்காரர் தாங்கள்தான் செய்யோணும் எண்டிச்சினம். இதால நினைவேந்தல் கட்டமைப்பு ஒண்டு உருவானது. அதையும் சில அரசியல் கட்சியள் குழப்பியடிக்க வெளிக்கிட்டவை, ஆனால் பிறகு அது ஒருமாதிரி அடங்கிட்டுது. இப்ப என்னெண்டால் "எங்கட சேர்ச்சிலதான் முதல் முதலா நினைவேந்தல் செய்தது. அதால நாங்கள்தான் நினைவேந்தலை முன்னுக்கு நிண்டு செய்யோணும்" எண்டு சில பாதர்மார் அங்கத்தைச் சனத்திட்ட சொல்லுகினமாம். அப்பிடித் தாங்களுக்கு முன்னுரிமையளிக்காட்டி, முதல் முறை செய்தமாதிரி முள்ளிவாய்க்கால் தூபியடியில நினைவேந்தல் நடக்கேக்க, தங்கட ஊர்ச்சனத்தை சேர்ச்சுக்குக் கூப்பிட்டு அங்க புறிம்பா தாங்களொரு நினைவேந்தல் பிரார்த்தனையைச் செய்யப்போறமெண்டும் அந்தப் பாதர்மார் சொல்லியிருக்கினம். இப்பிடி நினைவேந்தலிலகூட ஈகோ பார்த்துத்தான், இப்ப ஈரத்துண்டுகூட இல்லாம ஈனப்பிறவியளா ஈழத்தமிழர்கள் அலையிறம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பணிச்சுமை குறையும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். ஆதாயம் உண்டாகும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். உணவு விடயத்தில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** காரியங்கள் வெற்றிகரமாகமுடியும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



# நல்லூருக்கு அருகாக அசைவ உணவகம்!

## அகற்றுமாறு வலியுறுத்தி ஊர்வலம்

**யாழ்ப்பாணம், மே 15**

**யாழ்.மாநகரசபைக்கு முன்பாக ஈழத்துச் சைவசமயத்தின் அடையாளமாக விளங்கும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாக அசைவக உணவகமொன்று திறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடியாக மூடுமாறு வலியுறுத்தியும் நேற்றுப் புதன்கிழமை பஜனை வீதி ஊர்வலமொன்று முன்னெடுக்கப்பட்டது.**



நேற்று முற்பகல்10 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளைத் தொடர்ந்து சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் தலைமையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து சிறப்புப் பஜனை ஊர்வலம் சைவசமயத்தின் அடையாளமான நந்திக்கொடிகள் சகிதம் ஆரம்பமாகிப் பருத்தித்துறை வீதி வழியாக யாழ்.மாநகரசபையைக் கடந்து பின்னர் அதே வீதியின் மறுபக்கத்தால் புதிதாக அசைவக உணவகம் திறக்கப்பட்ட இடத்தைச் சென்றடைந்து தெய்வீக நாமப் பஜனை பாடப்பட்டதுடன் உரத்து அரோகராக் கோஷங்களும் எழுப்பப்பட்டன. இந்தப் பஜனை ஊர்வலத்தில் மலையகத்திலிருந்து வருகை தந்த சிவாச்சாரியார்கள், வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய நிர்வாகி அறநெறிச்செல்வி கு.ஜெயராணி, இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் மற்றும் அடியவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த சிறப்புப் பஜனை ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் புதிதாகத் திறக்கப்பட்ட அசைவக உணவகம் உடனடியாக மூடப்படாவிடில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்தனர். (ச-66)

# உதிரம் கொடுப்போம்

யாழ்ப்பாணம், மே 15

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 16 ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் இடம்பெற உள்ளது.

இந்த முகாம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் நினைவிட முன்றலில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை இடம்பெறவுள்ளது. உதிரம் கொடுத்து உயிர்காக்க முன்வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-100)

# வியாழமாற்ற யாகம்

யாழ்ப்பாணம், மே 15

பாணலிங்கேஸ்வரம், அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் வியாழமாற்ற யாகம் இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் யாகம் ஆரம்பமாகி மதியம் 12 மணியளவில் மகேஸ்வர பூஜையுடன் நிறைவடையும் என ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (ச-25-17)

# யாழ்.பல்கலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 15



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் ஒருங்கிணைப்பில் 'குருதியால் தோய்ந்த நம் தேசத்துக்காய் ஒரு துளி குருதி' எனும் கருப்பொருளில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், அதனைக் நினைவுகூரும் முகமாக இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு குருதிக்கொடையில் ஈடுபட்டனர். (ச-27)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கனடாவின் நீதிக்குரல்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போது கொல்லப்பட்டவர்களுக்காக, 'இனப்படுகொலை நினைவாலயத்தை' அமைத்திருக்கின்றது கனடாவின் பிரம்டன் நகர நிர்வாகம். இந்த நினைவாலயத்தை, கனடாவில் வசிக்கும் பல்லாயிரம் தமிழர்களோ அல்லது ஈழத்துப் பூர்விகம் உடையவரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரியோ அல்லது கனேடியத் தமிழர் பேரவையினரோ அமைத்தனர் என்று கருதினால், அது இமாலயத் தவறு. மேற்குறிப்பிட்டவர்களின் பங்களிப்பும் கணிசமாக அதில் இருந்தாலும், இதன் பின்னணியில் இருப்பவர் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண்.

'ஈழத்தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளுக்காகவும், அவர்களை அஞ்சலிக்கும் விதமாகவும்' ஓர் நினைவாலயம் அமைக்கப்பட்டது, அது திறந்துவைக்கப்பட்டது' என்பதாக இந்த விடயம் முடியவில்லை. மாறாக, ஈழத் தமிழர்களின் இதயங்களைக் குளிர்விக்கும் மிகக் காத்திரமான உரையை அன்றைய தினம் (நினைவாலயத் திறப்புவிழாவில்) நிகழ்த்தியிருக்கின்றார் மேயர் பற்றிக் பிரவுண். 'இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன என்பது அப்பட்டமான உண்மை. அவ்வாறு நடக்கவில்லை என்று எவராவது கூறினால், அவர்களுக்குக் கனடாவில் இடமில்லை. கொழும்புக்கே செல்லுங்கள்' என்று கூறியிருக்கின்றார் அவர்.

போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை கனேடியத் தலைமைகள் வலியுறுத்துகின்றமை இதுவொன்றும் முதல் முறையல்ல. 'இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே. இலங்கை அரசாங்கம் அத்தகைய போர்க்குற்றங்களில் ஈடுபட்டது' என்று 2022ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய நாடுதான் கனடா. அத்துடன், 2009ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் மனித உரிமைகள் மீறலுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோருக்கும் இராணுவப் பின்புலம் கொண்ட மனிதகுல விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களான சுனில் ரத்நாயக்க மற்றும் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோருக்கும் பயணத் தடைகளை விதித்தும் கனேடிய அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. ஆக, தமிழர்களுக்காக ஆத்மார்த்தமாக நீதிதேடும் பயணத்தின் காத்திரமான பங்காளியாகக் கனடா இன்று மாறியிருக்கின்றது.

கனடா ஒன்றும் சாதாரண நாடல்ல. உலகின் மிகப்பெரும் இராணுவக் கூட்டணியான நேட்டோவின் அங்கத்துவ நாடு. உலகில் ஆகச்சிறந்த பொருளாதாரப் பலமுள்ள நாடுகளைக் கொண்ட ஜி-7 கூட்டணியின் பங்காளி நாடாகவும் உள்ளது. எனவே, கனடா போன்ற ஒரு நாட்டின் ஆதரவை முழுமையாகப் பெற்றுள்ளமை ஈழத் தமிழர்களுக்குப் பெரும் வாய்ப்பே. இந்த வாய்ப்பை எமது தமிழ்த்தலைவர்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக காலச்சக்கரம் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்களுக்காக துணிந்து நின்று சரியான பாதையில் வழிகாட்டக்கூடிய தலைவர் எவரையும் எமக்குத் தரவில்லை. இப்போதும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தில்கூட, அந்தப் படுகொலைக்கு நீதி கேட்பதை விடவும் உள்ளூராட்சிசபைகளில் யார் ஆட்சியமைப்பது என்பதிலேயே எங்கள் அரசியற்கட்சிகளினதும், அரசியற் தலைவர்களினதும் கவனம் குவிந்திருக்கிறது. நமது அரசியற் தலைவர்கள் அதிகார நாற்காலிக்கான அடிபிடியில் இருக்கும்போது, கனடா தேசத்து மேயர் ஒருவர் எமக்கு நீதி கேட்கும் நினைவுத்தூபியைத் திறந்துவைத்திருக்கிறார். இதைப்பார்த்த பின்னர்கூட எம்மவர்களுக்கு புத்திவரப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

ஆரோக்கியமாக இருப்பது என்பது உங்களை மேலும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் செயல்.

– ரொபின் சர்மா–






# சின்னம்மை வீரியம்
## தடுப்பூசிக்குப் பற்றாக்குறை

**கொழும்பு, மே 15**
**சின்னம்மை நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், நோயைத் தடுக்க உதவும் வெரிசெல்லா தடுப்பூசி தற்போது மருத்துவமனைகளில் கையிருப்பில் இல்லை என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

சின்னம்மை என்பது வெரிசெல்லாஜோஸ்டர் வைரஸால் ஏற்படும் மிகவும் தொற்று நோயாகும். இது முதன்மையாக தடுப்பூசி போடப்படாத நபர்களிடமிருந்து வைரஸ் இல்லாத மற்றவர்களுக்குப் பரவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத மற்றும் பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பிலுள்ள 90 வீதம் பேருக்கு வரை தொற்றுநோயாக மாறக்கூடும்.
சின்னம்மை கர்ப்பிணிப் பெண்கள், 12 மாதங்களுக்கும் குறைவான குழந்தைகள், இளம்பருவத்தினர், பெரியவர்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்களுக்குக் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## சாரதி பற்றாக்குறை ரயில்கள் இரத்து

கொழும்பு, மே 15
பிரதான மார்க்கத்தில் 23 ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது. ரயில்வே சாரதிகளின் பற்றாக்குறை காரணமாக ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரதான, களனி, கரையோர மற்றும் புத்தளம் மார்க்கத்திலான ரயில்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## பொல்லால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு, மே 15
கொழும்பு தெமட்டகொடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவில பட்டுமக பிரதேசத்தில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் என தெமட்டகொடப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.
இனந்தெரியாத நபர்கள் சிலரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)



## பஸ் விபத்து உயிரிழப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 15
கண்டி - நுவரெலியா வீதியில் கொத்மலை, றம்பொட கரடி எல்லப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் படுகாயமடைந்து கம்பளை ஆதார மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த இளைஞர் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார் என கொத்மலைப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராமப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞராவார். அதன்படி இந்த விபத்தில் இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உண்டியல்கள் ஏலம்

கொழும்பு, மே 15
பல மில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையி னூடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
இதன்படி, ஒரு இலட்சத்து 73,000 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன. (ச-இ)

# அதிகாரப்பகிர்வை ஏற்றால் மாகாணசபைத் தேர்தலை நடத்துக

## அரசைக் கோருகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



**யாழ்ப்பாணம், மே 15**

**மாகாணசபைத் தேர்தலை நடத்துவதன் மூலமே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அதிகாரப்பகிர்வைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளதை வெளிப்படுத்தமுடியும் என்று ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சித் தேர்தல் மூலம் அரசாங்கம் தங்களது ஆறுமாத ஆட்சியின்மீது மக்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டை உணரக்கூடியதாக இருக்கும். இந்தநிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் உடனடியாக நடத்துமா என்ற கேள்விகள் எழுந்துள்ளன. ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.யானது, கொள்கை அளவில் மாகாண சபைகளுக்கு எதிரானதாகும். அரசாங்கம் உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதன் ஊடாக அதிகாரப்பகிர்வுக்கு எதிரானவர்கள் அல்லர் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தமுடியும். அவ்வாறில்லாவிட்டால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை புறந்தள்ளி அரசாங்கம் செயற்படுகின்றது என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும் - என்றார். (எ-இ)




வெசாக் தினத்தை முன்னிட்டு தருமபுரம் பொலிஸாரினால் கடந்த திங்கட்கிழமை குளிர்பானம் வழங்கப்பட்டது. (ச-25,113)

# நாயன்மார்களின் குருபூசை நிகழ்வு



கொடிகாமம், மே 15

நாயன்மார்களுக்கான சித்திரை மாதத்துக்குரிய குருபூசை நிகழ்வு, சமூக செயற்பாட்டாளர் சி.பிரபாகரனின் நிதி அனுசரணையில் அதிபர் சி.கா.கமலநாதன் தலைமையில் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது நாயன்மார்களான திருநாவுக்கரசு நாயனார், விறன்மிண்டநாயனார், சிறுகுறிப்புத் தொண்டநாயனார், இசைஞானியர் நாயனார், சிறுத்தொண்டநாயனார், மங்கையர்க்கரசி நாயனார் ஆகியோரின் குருபூசைக் கிரியைகளை சக்திக்கிரியாகுருமணி, சிவஸ்ரீ.இ.குமாரசுவாமி குருக்கள் நிறைவேற்றி ஆசியுரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் மற்றும் ஆசிரியர் சிவத்திரு சு.சிவானந்தராஜாவின் உரை என்பன இடம்பெற்றன. (ச-25, 159)





# எங்களின் கண்ணீருக்கு சர்வதேசத்தின் பதிலென்ன?

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி

மன்னார், மே 15

காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளைத் தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் இன்று மூடிவிட்டன. இன்னும் எத்தனை கண்கள் மூடப்போகின்றனவோ தெரியாது. இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடிப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி நினைவுக்கஞ்சி காய்ச்சி மக்களுக்கு நேற்று வழங்கப்பட்டபோதே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டது. முள்ளிவாய்க்கால் மண்ணில் இரத்தமும், சதையும் சிந்தப்பட்ட நாளைக் கடந்த 16 வருடங்களாக ஒவ்வொரு தமிழ் உறவுகளும் நினைவுகூர்ந்து கஞ்சி காய்ச்சி வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

கஞ்சிக்காக வரிசையில் நின்ற எத்தனையோ உறவுகள் கஞ்சி கிடைக்காமல் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். இன்றும் அதை மறக்கமுடியாது. மன்னிக்கவும் முடியாது. எம் இனத்துக்கு நடந்த கொடூரத்தை உலக நாடுகள் அனைத்தும் பார்த்துக் கொண்டுதான் இருந்தன. இன்றுவரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-56)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சண்முகம் ஜீவராசா தலைமையில், தருமபுரம் பகுதியில் நேற்றுப்புதன்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது. (ச-25, 113)





வேலணை நேதாஜி கலாமன்றம் நடத்திய பௌர்ணமிதின நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன. மன்றத் தலைவர் சானுஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் பங்கேற்றார். (ச-20)

# நுங்குக்கு மவுசு

யாழ்ப்பாணம், மே 15

யாழ். குடாநாட்டில் நுங்கு விற்பனை அதிகரித்துள்ளது.

வீதியோரங்களில் வைத்து அநேகமான நுங்குகள் விற்பனைசெய்யப்படுகின்றன. யாழ்ப்பாணத்துக்கு வரும் சுற்றுலாவிகள் ஆர்வத்துடன் நுங்குகளை கொள்வனவுசெய்து வருகின்றனர். நுங்கு ஒன்று 100 ரூபாவாக விற்பனைசெய்யப்படுகின்றது. (ச- 25-17)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
## யாழ்ப்பாணம்
## வாகன சுத்திகரிப்பு சேவை 2025 - 2026

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வாகனங்களுக்கான சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்காக தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களை கோருகின்றார்.

1. யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை

| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | NP/RDHS/VS/2025 | வாகன சுத்திகரிப்பு | 180,000.00 | 30.05.2025 மு.ப 10.30 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212226253, 0212212278 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 16.05.2025 ஆம் திகதி முதல் 29.05.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 30.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 23.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971
மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com

CR/44990)J-1

# கொழும்பு மாநகர மேயர் ஜூன் 2இல் வாக்கெடுப்பு

கொழும்பு, மே 15

கொழும்பு மாநகர சபையின் மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு அடுத்த மாதம் இரண்டாம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பை உள்ளாட்சி ஆணையர் நடத்தவுள்ளார்.

எந்தவொரு கட்சியும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறாததால், மேயர் மற்றும் துணை மேயர் பதவிகளுக்கான வேட்பாளர்களை வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. உள்ளாட்சி ஆணையரால் நடத்தப்படும் தேர்தலில் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளர், மேயராகப் பதவியேற்பதற்கான வாய்ப்பு உள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கொழும்பு மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 48 என்பதாகக் காணப்படுகின்றது. எதிர்க்கட்சிகளில் இருந்து 69 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்தப் பின்னணியில் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியைக் கைப்பற்ற ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கடுமையான போட்டியில் ஈடுபட்டுள்ளன. (அ-எ-இ)

## அறிவித்தல்

### ஈ-சன்ஸ் அந்தியகால சேவை

நிறுவனத்தின் ஊழியர்

### நடேசு சுஜிகரன் (902023143V)

எமது நிறுவனத்தில் 18ம் திகதி மார்ச் 2025 முதல் சேவையில் இல்லை என்பதையும் அவரால் தனிப்பட்ட தேவைகளுக்கும் மற்றும் போலியாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிறுவனமோ உரிமையாளர்களோ சக ஊழியர்களோ பொறுப்பு ஏற்காது என்பதை அனைத்து நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும், பொது மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**எம் சார்பாகவோ எமது நிறுவனம் சார்பாகவோ எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டாம்.**

ஈ-சன்ஸ் அந்திகால சேவை
'தயாரம்ஸ் கட்டிடம்',148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1944



மறைவு 14 . 05 . 2025

### வேலுப்பிள்ளை கைலைநாதன்

**(ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகர் வலயக்கல்வி பணிமனை, யாழ்ப்பாணம்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கைலைநாதன் (ஓய்வுபெற்ற விவசாய ஆலோசகர் வலயக்கல்வி பணிமனை, யாழ்ப்பாணம்.) அவர்கள் நேற்று (14.05.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (ஓய்வுநிலை ஆசிரியர்) - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவமலர் அவர்களின் பாசமிகு கணவரும், டுசீந்திரா (லண்டன்), Dr.அனுசன் (Consultant Dematologist BH Pointpedro, BH Tellippalai), ஜனார்த்தன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன் (லண்டன்), இளவேணி (வைத்தியர்), நிவேதா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ரவீஸ்வரன், தேனுஷான் (தரம்-11 பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும், விமலோசனி, மீனலோசனி (ஓய்வுநிலை பிரதி அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR/44994) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 05 . 1942



மறைவு 14 . 05 . 2025

### திரு. குருசுமுத்து பாக்கியநாதன்

(ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார மேற்பார்வையாளர்-கொழும்பு மாநாகரசபை)

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. குருசுமுத்து பாக்கியநாதன் அவர்கள் நேற்று (14.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுமுத்து-ஆரோக்கியம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற அருளானந்தம்-அமலோற்பவம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற றொசாறியோறாணி பாக்கியநாதன் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்ரன் செபமாலை, ஆரோக்கியநாதர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கியோமர் அல்பிரட் மற்றும் இம்மானுவேல், ஜெறாட்(பிரான்ஸ்), கிளேறா பிரான்சிஸ்கா (ஓய்வுநிலை ஆசிரியர், யா/உடுவில் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் இமல்டா புஷ்பம், மற்றில்டா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிறிஸ்ரினா (பிரான்ஸ்), கிறிஸ்ரி அருள்றாஜன் (Manager-Procurement & Stores, Tokyo Cement Company (Lanka) PLC), அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (அ.ம.தி), கிறிஸ்ரீன் றோஸ் (சட்டத்தரணி - இலங்கை (கனடா), கிறிஸ்ரி ஜோசவ் கருணாறாஜன் (North & East Area Sales Manager, Sigiri Roofings) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அல்பேர்ட் பிரீஸ் (பிரான்ஸ்), நேவிஸ் கொன்சலேற் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-விவசாய அமைச்சு, கிழக்கு மாகாணம்), ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா), தர்மபாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், கண்டாவளை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆர்நோலின் பிரியங்கா (பிரான்ஸ்), அட்றியன் (பிரான்ஸ்), ஆர்னோ (பிரான்ஸ்), அலன் (பிரான்ஸ்), டெபோறா (கனடா), கத்தலின் (கனடா), றொசைறோ, நயோமிக்கா, ஒலிவியா றொசாறியோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை (16.05.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி. ப 3.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

அருட்பணி. கிறிஸ்ரி நிர்மலறாஜன் (O. M. I)(மகன்) - 0772418647
கிறிஸ்ரி அருள்றாஜன் (மகன்) - 0773733480
கிறிஸ்ரி ஜோசவ் கருணாறாஜன் (மகன்) -0762380873
அல்பேர்ட் பீரிஸ் (பிரான்ஸ்) (மருமகன்) - 0033651850594
ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா) (மருமகன்) - 0016474031441

**ஆரோக்கிய வாசம்,**
**டாக்டர் சுப்பிரமணியம் வீதி.**
**சுன்னாகம்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1953

மறைவு 13 . 05 . 2025

## கனகரெட்ணம் லோகானந்தம்

நல்லூரை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லூர் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் பூட்டனும் முன்னாள் ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸின் உரிமையாளருமான கனகரெட்ணம் லோகானந்தம் அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம் - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - இராணிமலர் தம்பதியரின் மருமகனும், றஞ்சினிதேவியின் அன்புக்கணவரும், சிந்துகௌரி (ஆசிரியை கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயம்), சிவதர்ஷினி (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்- யாழ்-மாவட்டச் செயலகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், அபராஜிதனின் (HNB Assurance - Colombo) அன்பு மாமானாரும், காலஞ்சென்ற கிருஷ்ணானந்தம், சற்குணானந்தம், லோகராணி (அவுஸ்ரேலியா), கலைவாணி, குமுதினி, குகானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தயாபரன், சறோஜினிதேவி, மனோகரன், அருள்பரன், காலஞ்சென்ற மாலினிதேவி, கௌரி,சசிகரன், சூரியகுமாரி, காலஞ்சென்ற றஞ்சினி, ஜெயபாலன், சந்திரபோஸ், உருத்திரகுமாரன், அருட்செல்வி ஆகியோரின் மைத்துனரும், தர்சன், சபேசன், நிமலன், துஷ்யா, றஜித்தா, சுபோதினியின் சித்தப்பாவும், பானுஜன், விதுஷன், திருவரங்கன், சிவசேந்தன், குகசுதன் ஆகியோரின் பெரியப்பாவும், பார்த்தீபன், அர்ச்சுனா, தமிழினி, கௌதமன், ஸ்ரீகுமரன், கார்த்திகா, செந்தூரன் ஆகியோரின் மாமானாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

சிந்து(மகள்):- 076 379 2767

தர்சினி(மகள்):- 077 229 0093

இல,10 பழைய பெற்றோல் நிலைய வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(CS/58250) J-1

# நீங்கா நினைவில்...

25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

23ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**உயர் திரு தில்லையம்பலம் பாலசுப்ரமணியம்**

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரியும் முன்னாள் சிறிலங்கா புத்தகசாலையின் கணக்காளரும் ஆவார்.)

தோற்றம் 20.03.1925 — மறைவு 21.04.2000

**திருமதி மனோன்மணி பாலசுப்ரமணியம்**

தோற்றம் 25.03.1932 — மறைவு 03.04.2002

அன்பின் பிறப்பிடம் அருளின் இருப்பிடம்
பண்பின் உறைவிடம் பாசத்தின் தரிப்பிடம்
எங்கள் குலம் விளங்க ஏற்றிவைத்த குல விளக்குகள்
தரணி உள்ளவரை தங்கும் உம் நினைவுகள்.

குடும்பத்தினர்
(மகன் - பா.ஜெயபாலன்)

(CS 58248) E-1

# நினைவஞ்சலி ஆத்மாசாந்திப்பிரார்த்தனை



தோற்றம் 01 . 05 . 1953

மறைவு 15 . 04 . 2025

## சாரதாதேவி இரங்கநாதன்

வண்ணார் பண்ணை உடையார்
ஒழுங்கையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட சாரதாதேவி
இரங்கநாதன் அவர்களின்
நினைவஞ்சலியும் ஆத்மா சாந்திப்
பிரார்த்தனையும் அன்னாரது இல்லத்தில்
இன்று நடைபெறும். உதவிகள் புரிந்த
அனைவருக்கும் நன்றி.

பிருந்தாவனம்
29/21, உடையார் ஒழுங்கை, ஐயனார் கோவிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 552 5831

# வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்



தோற்றம் : 25.09.1948 — மறைவு : 15.04.2025

## புஸ்பலீலாவதி கந்தசாமி (ராசாத்தி)

கடந்த (15.04.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எங்களின் இல்லத்தலைவி அமரர் புஸ்பலீலாவதி கந்தசாமி அவர்களின் வீட்டுக் கிருத்தியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னாரின் கைதடி கிழக்கு இல்லத்தில் இன்று (15.05.2025) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து எமது சோகத்தில் கலந்துகொண்ட அயலவர்கள், உறவினர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள், தொடர்பு சாதனங்கள் மூலமாக தமது சோகத்தைப் பகிர்ந்து கொண்ட அன்பு நெஞ்சங்கள் மற்றும் பதாதைகள், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், மலர்வளையங்கள், என்பனவற்றை வைத்து அஞ்சலித்தோருக்கும், இரங்கல் உரையை நிகழ்த்தியவர்களுக்கும், மரணச்சடங்கு, அந்தியேட்டி கிரியைகளை செவ்வனே நிகழ்த்தி வைத்த சிவாச்சாரியார்களுக்கும், எங்களின் குடும்பத்தினர் சார்பான நன்றியை இருகரங்கள் கூப்பி தெரிவிக்கின்றோம்.

"புஸ்பவனம்"
கைதடி
கிழக்கு

குடும்பத்தினர்

(CS 58238) E-1

## வழிமறித்துத் தாக்குதல் சந்தேகநபர் கைதானார்!

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர், தன் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த 5ஆம் திகதி இரவு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களும் அரசியற் பின்புலம் உடையவர்கள் என்று, ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இன்னொருவர் தேடப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம–125)

# மரண அறிவித்தல்



## உதயசந்திரன் வேதநாயகி (வேதா)

களபூமி காரைநகரை பிறப்பிடமாகவும், 1ஆம் ஒழுங்கை குட்செற் வீதி தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட, அமரர் உதயசந்திரன் வேதநாயகி அவர்கள் **(13.05.2025)** செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் - கோமளம் தம்பதிகளின் அன்பு மகளும், பரமசாமி - பாக்கியலக்சுமி தம்பதிகளின் மருமகளும், உதயச்சந்திரன் (உதயன் லொஜ்) அன்பு மனைவியும், சஞ்சிகா (களனி பல்கலைக்கழகம்) அன்பு தாயாரும், பத்மதேவி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற உதயசூரியன் மற்றும் உதயராணி (கனடா), உதயறோசா (அமெரிக்கா), உதயலதா (கனடா), உதயமாலா (கனடா), உதயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் **15.05.2025** வியாழக்கிழமை நன்பகல் **2** மணிக்கு வவுனியாவில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று. தகனக்கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**உதயசந்திரன்**
**077 790 1828**

**1ஆம் ஒழுங்கை குட்செற்வீதி**
**தோணிக்கல் வவுனியா.**

(CS 3162) D"

ஓம் விராட் விஸ்வப் பிரம்மநே நமஹ

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**26.04.2025 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்னை**

## அமரர் கந்தசாமி செல்வராணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (15.05.2025) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அன்புடன் அழைக்கின்றோம்.

**பொன்னம்பலம் வீதி,**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**
**தொ.பே 0766166699**

**குடும்பத்தினர்**

(CR 44996) D"

# மரண அறிவித்தல்

மலர்வு
10 . 02 . 1939



உதிர்வு
13 . 05 . 2025

## செல்லர் நவரத்னராஜா

மாதகல் வேலுப்பிள்ளை கடையைப் பிறப்பிடமாகவும் மாதகல் விபுலானந்தர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் நவரத்னராஜா அவர்கள் கடந்த (13.05.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வர்-நாகரத்தினம் தம்பதியின் அன்புப் பதல்வரும், ராசமணி அவர்களின் அன்புக்கணவரும் சுகிர்தகலா, பிரபாகரன், கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வன்னியசிங்கம், ரவிச்சந்திரன், சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 069 0318**

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 02 . 1942



இறப்பு
13 . 05 . 2025

## அமரர் அருளம்பலம் கந்தவேள் (வேலணை)

(உரிமையாளர் கவிதாஸ் ஸ்ரோர்ஸ் வவுனியா )

யாழ் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கந்தவேள் அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2025) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் யோகம்மாவின் பாசமிகு கணவரும் கவிதா (விசேட நரம்பியல் வைத்திய நிபுணர்-யாழ் போதனா வைத்தியசாலை), கவிதாசன் (பொறியியலாளர்-UK), யசோதா (வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளங்குமரபாகு (விசேட பொது வைத்திய நிபுணர்-யாழ் போதனா வைத்தியசாலை), சுபாயினி (விசேட குழந்தை வைத்திய நிபுணர்-UK), றமேஸ் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காவியா, சிவேஸ், வருண், சேயோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருவருடசெல்வி, தணிகாசலம், செந்தமிழ்ச்செல்வி, செல்வரட்ணம், ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராசகோபால், அருந்தவச்செல்வி, சந்திசாதேவி, ஶ்ரீகுசன், இராணியம்மா, அரசரட்ணம், சிற்றம்பலம், மகாலிங்கம், கோணேசலிங்கம், இந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**214/30, இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**
**(யாழ் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 221 3718**
**071 866 7715**

# பஸ் விபத்தில் நால்வர் காயம்

நுவரெலியாவிலிருந்து மட்டக்களப்புக்குப் பயணித்த தனியார் பஸ் விபத்துக்குள்ளானதில் பயணிகள் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நுவரெலியாவலப்பனைப் பிரதான வீதியில் உள்ள மஹா ஊவா வளைவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

பஸ்ஸின் முன் இடது சக்கரம் கழன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்ததால், பஸ் வீதியின் இடதுபுறத்தில் உள்ள மலையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்து நடந்தபோது பஸ்ஸில் 60 பயணிகள் இருந்தனர் என்று கூறப்படுகின்றது. (எ-இ)



அரசாங்கத்தால் காணி சுவீகரிப்புத் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பிலும், குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலும், தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பிலும், இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரம் தொடர்பிலும் தமிழ்த் தேசியப் பேரவையினர் இந்தியா, பிரிட்டன், கனடா மற்றும் ஐ.நா. ஆகிய தரப்புகளின் தூதுவர்களிடம் நேற்று நேரில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-125,26-66)


# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 04 . 1949



இறப்பு 14 . 05 . 2025

## கோவிந்தபிள்ளை வேல்முருகு

**(இளைப்பாறிய உப தபால் அதிபர் தருமபுரம்)**

தம்பசிட்டியை பிறப்பிடமாகவும் முரசு மோட்டை, இல 378,7 ஆம் யூனிற், தருமபுரம் எனும் முகவரியை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை வேல்முருகு **(இளைப்பாறிய உப தபால் அதிபர், தருமபுரம்)** (14.05.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - செல்லம்மா அவர்களின் ஏகபுதல்வரும், சிவானந்ததேவி **(இளைப்பாறிய அதிபர், இல 01 அ.த.க பாடசாலை, தருமபுரம்)**.அவர்களின் அன்புக்கணவரும், பமீரதி **(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு)**, நிமி **(அபிவிருத்தி உத்தியோகத்தர் ,சுகாதாரஅமைச்சு வட மாகாணம்)**, நமுணகுலன் **(கனடா)**, ஆயகுலன் **(சிரேஸ்ட உதவி செயலாளர் கல்வி அமைச்சு வடமாகாணம்)**, ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலம் சென்றவர்களான அமரர் பூபதி, அமரர் பாமதி, அமரர் அலர்மேல்நங்கை, அழகாம்பிகை ஆகியோரின் சகோதரனும், புவனேந்திரா, அம்பிகைவாசன், விஜிதா, சுவஸ்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜாதவி, இலக்கியன், கேஷவி, அபிரா, அத்விகா, கிருத்திகன், நயனிகா, விகுலன், ருத்ரிகா, மதுஷிகா ஆகியோரின் அருமை பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் (16.05.2025) வெள்ளிக்கிழமை மதியம் 1மணியளவில் D5, பூநகரி வீதி, பரந்தன் என்ற முகவரியில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக பூதவுடல் தருமபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

**தகவல்**
**குடும்பத்தினர்**
**075 559 4992**


# கொத்மலை விபத்து; நிதி அனுப்பிவைப்பு



கொழும்பு, மே 15

கொத்மலை, கெரண்டியெல்லப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட நிதி, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ச-இ)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

**(22.05.2025 - 31.12.2025)**

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடை 2025ஆம் ஆண்டிற்கு (22.05.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்காக சபையினால் மீள் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 15.05.2025 – 21.05.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 21.05.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 21.05.2025 புதன்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் “தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்” என்னும் முகவரிக்கு எதிர்வரும் 21.05.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | 2,884,445.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26, 2024.11.23 ஆம் திகதிகளில் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**

(CR/44995)J-1 2025.15.05




## மின்விளக்குகளால் ஒளிர்ந்த நாடாளுமன்றம்

கொழும்பு, மே 15

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி, தியவன்னா ஓயா உள்ளிட்ட வளாகம் என்பன வெசாக் கூடுகள் மற்றும் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டன.

சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட குழுவின் வழிகாட்டலில் இந்த அலங்காரம் முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை வெசாக் பண்டிகையை முன்னிட்டு இம்முறை ‘தியவன்னா பௌத்த பக்தி கீதம்’ நிகழ்வு நாடாளுமன்ற வளாகத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 6 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டு தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கப்பட்டது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு சாவகச்சேரி பிரதேசசபைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தென்மராட்சிக்கிளை உறுப்பினர்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். (ச-25, 28,66)

# தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய முதியவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். தீவிரமான நோய் நிலையால் பாதிக்கப்பட்டிருந்த அந்த முதியவர், நோயின் வலியைப் பொறுத்துக்கொள்ளமுடியாமல் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று மரண விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26-27)

## பாடசாலைகளில்...

பாடசாலைகளில் இடம்பெறும் பாலியல் குற்றங்கள் தொடர்பில் முறையிடுவதற்கு 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள்ளுமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும். எனவே, பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றால் பாடசாலை அதிபர்கள் அல்லது பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு வழங்கமுடியும் என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேலும் கூறியுள்ளது.

பாடசாலைகளில் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ncpa@childprotection.gov.lkஎன்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முறைப்பாடு அளிக்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## இறம்பொடவில்...

இதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த அனைவரும் கொத்மலை பிராந்திய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த மேலும் சிலர் கம்பளை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலிருந்து அநுராதபுரம் இராஜாங்கனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றே இவ்வாறு வீதியைவிட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றுதமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-இ)

## ஆனையிறவு...

தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டிய போதிலும், எமக்கு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை.

மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடிதண்ணீர் பிரச்சினையும் இருக்கின்றது. இந்தமாதம் எமக்கு 4 நாள்களே வேலை வழங்கப்பட்டது. இந்தமாதம் வேலை வழங்கப்படாத ஊழியர்களும் உள்ளனர். மனித வலு உள்ளபோதும், இயந்திர வலுவைப் பயன்படுத்துகின்றனர். பணியார்களுக்கு சீருடையோ, பாதுகாப்புக் கவசங்களோ வழங்கப்படவில்லை. உப்பளம் திறக்கப்பட்டபோது 8 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதி வழங்கப்படும் என்று அமைச்சர் கூறினார். ஆனால், வெறும் 800 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதியே வழங்கப்பட்டது.

அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே அளவான போனஸ் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகிறது. ஆனால் இங்கு எமது வரவைப் பார்த்து, மிகவும் குறைந்த போனஸ் தொகை வழங்கப்படுகின்றது. சுழற்சி முறையில் வேலை வழங்கப்படுவதால், நாம் எவ்வாறு ஒழுங்காக பணிக்கு வருவது? எமக்கான ஒரு தொழிற்சங்கத்தை இயங்க விடுவதில்லை. இது அரச நிறுவனம் போல் இல்லாது தனியார் நிறுவனம் போலவே செயற்படுகிறது.

ஊழியர்களின் நலனுக்காக யாராவது அதிகாரி இங்கு குரல்கொடுத்தால் இடமாற்றம் வழங்கப்படுகின்றது. இலாபம் பகிர்ந்தளிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அவ்வாறு எந்த நடைமுறையும் காணப்படவில்லை - என்றனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரு தரப்பினருடனும் உரையாடி நிலைமையைச் சுமுகமாக்கினார்கள்.

இந்த விடயம் தொடர்பில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் முரளிதரனிடம் மனுவொன்றையும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வழங்கினார்கள். அவர்களின் முறைப்பாடுகள் தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலர் கூறியுள்ளார். (அ-எ-27,214,113)

## உப்பளத்தில்...

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு உப்பளத்தில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர், உப்பளத்தின் நிர்வாகத்தினரை நேரில் சென்று சந்தித்த பின்னர் அவர் தெரிவித்ததாவது:-

ஆனையிறவு உப்பளத்தில் உள்ள பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டி பணியாளர்கள் போராடியிருந்தனர். அவர்களின் போராட்டம் தவறு என்று நான் கூறவில்லை. நீண்டகாலக் காத்திருப்பு, வலி, வேதனை இதெல்லாம் சேர்ந்துதான் அவர்கள் இவ்வாறு போராடியுள்ளனர். எனவே, அவர்களின் கோரிக்கைக்கு முழுமையான தீர்வை நாங்கள் பெற்றுக்கொடுப்போம்.

உண்மையில் ஆனையிறவு உப்பளம் இன்னமும் முழுமையான இயங்கு நிலையை அடையவில்லை. இயந்திரத்தின் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதைச் சரிசெய்வதற்காக உபகரணங்கள் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. இரு வாரங்களுக்குள் முழுமையான பணிகளை மேற்கொள்ளக்கூடியவாறு இருக்கும்.

உப்பளம் முழு வினைத்திறனுடன் செயற்படும்போது வருமானம் அதிகரிக்கும் அதன் பின்னர் இங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை நாங்கள் உயர்த்துவோம்-என்றார். (அ-ம-113)

## 267 சபைகளிலும்...

வழிகளிலும் எதிர்கொள்ளத் தயார் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் 60ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜூன் மாதம் 2ஆம் திகதிக்கு பிறகு எமக்குக் கிராமத்தின் பலமும் கிட்டும். 152 சபைகளில் ஆரம்பத்திலேயே தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும். ஏனைய 115 சபைகளில், சபை நடக்கும் நாளில் ஆட்சி அமைக்கப்படும்.

மக்களாணை என்றால் என்னவென்பதை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும். சபைகளில் முதல் இரு இடங்களை பிடித்த தரப்புகள்தான் ஆட்சியமைக்க வேண்டும் என்றே மக்கள் கருதுகின்றனர். அந்தவகையில் தேசிய மக்கள் சக்தி வென்ற 267 சபைகளிலும் நாம் ஆட்சியமைப்போம். அது மக்களாணை மூலம் எமக்கு வழங்கப்பட்ட உரிமையாகும்.

எனவே, நாம் மக்களின் ஆணையின் பிரகாரம் செயற்படுவோம். அதற்கு எதிராக எவரேனும் செயற்பட முற்பட்டால் அரசமைப்பு, சட்டம், அரசியல் போன்றவற்றின் ஊடாகச் செயற்பட நாமும் தயார். நாங்கள் முன்னிலையில் உள்ள சபையில், எம்மைமீறி முடிந்தால் ஆட்சியை அமையுங்கள். அவ்வாறு அமைத்தாலும் மூன்று, நான்கு மாதங்கள்தான் பயணிக்க முடியும். நாம் மக்களின் ஆணையைத்தான் மதிக்கின்றோம். அதனுடன் விளையாட முற்படக்கூடாது- என்றார். (அ-ம-44)

## ஆனையிறவில்...

ஆனையிறவு இயக்கச்சி வளைவுப் பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்த இருவரும் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உயிராபத்து இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

## புங்குடுதீவு...

வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆலயத் தரப்பினரால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையிலேயே, நேற்றையதினம் இரண்டு சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கனடாவின்...

இலங்கை இராணுவம் ஒருபோதும் இனப்படுகொலையில் ஈடுபடவில்லை. எனவே, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாகக் கனடாவில் இருந்து முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதுடன் கண்டிக்கத்தக்கவையுமாகும் என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் ஒற்றுமை, கௌரவம் மற்றும் நல்லிணக்கத்துக்காக ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு குடிமகன் என்ற அடிப்படையில் கனடாவின் ஒன்றாரியோவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

ஒன்றாரியோவில் (ஒன்றாரியோ மாகாணத்தின் பிரம்டன் நகரில்) தமிழர் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்டுள்ளமையை முன்னிட்டும், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை தொடர்பில் பரப்புரை செய்யும் வாரத்தைக் கடைப்பிடிக்கின்றமையை முன்னிட்டும் நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். இலங்கை இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என்பதை நான் ஆழமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன். எனவே, இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் இத்தகைய குற்றச்சாட்டுகள் இங்கு (இலங்கையில்) மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்குப் பாதிப்பையே ஏற்படுத்தும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர்தான் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டது. அது ஒருபோதும் எந்தவொரு மக்கள் கூட்டத்தையும் இலக்குவைத்த போராகாது - என்றார். (அ-ம-44)

## இனப்படுகொலை...

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளில் உயிரிழந்தவர்களின் நினைவாக கனடாவின் பிரம்டன் நகரில் நினைவாலயமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நினைவாலயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கண்டன அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, இனப்படுகொலை நடந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தேசிய ரீதியிலோ அல்லது சர்வதேச ரீதியிலோ எந்தவொரு அதிகாரியாலும் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படவில்லை. ஆதலால், இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகள் அனைத்துமே தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துகளாகவே அமைந்துள்ளன.

பிரம்டன் நகரில், தமிழர் இனப்படுகொலை நினைவாலயத்தை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளை இலங்கை அரசாங்கம் பலமுறை கண்டித்துள்ளது. பிரம்டன் நகர சபையின் இத்தகைய வருந்தத்தக்க முயற்சியைத் தலையிட்டுத் தடுக்குமாறு, கனடாவின் மத்திய அரசை இலங்கை தொடர்ந்தும் வலியுறுத்தும். இந்த நடவடிக்கைகளை இலங்கைக்கும், கனேடிய சமூகங்களுக்கும் எதிரானதாகவே இலங்கை அரசாங்கம் கருதுகின்றது. அத்துடன், இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், அனைத்து இன மக்களுக்கும் இடையில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் இலங்கையின் முயற்சியை சீர்குலைப்பதாகவே அமையும்.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கனடாவின் வெளிவிவகார அமைச்சு, இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக கனடா இன்னமும் உறுதிப்படுத்தவில்லை என்று அறிவித்திருந்தது. அத்துடன், 2024ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை மீண்டும் உறுதிப்படுத்தியது என்பதையும் நாம் நினைவூட்டுகின்றோம் என்றுள்ளது.

முன்னதாக, பிரம்டன் நகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம் தொடர்பில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இலங்கைக்கான கனேடியத் தூதுவரைச் சந்தித்துத் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## செம்மணி...

மையில் இந்த ஆய்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன. தமிழர்களைப் பொறுத்தவரை செம்மணி சிந்துபாத்தி மயானம் நீண்டகாலமாகச் சர்ச்சைக்கு உள்ளானதாகவே இருந்துவரும் நிலையில் இன்றையதினம் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை எதிர்பார்ப்புகளை அதிகரித்துள்ளது. (அ-ம-26)

# அமெரிக்காவிடம் இருந்து ஆயுதம் வாங்கவுள்ள சவுதி



நியூயோர்க், மே 15

அமெரிக்காவில் இருந்து 142 பில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ ஆயுதங்களை கொள்முதல் செய்யும் ஒப்பந்தத்தில் சவுதி அரேபியா கைச்சாத்திட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 4 நாள்கள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கோண்டு நேற்றுமுன்தினம் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார். ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக பதவியேற்றபின் ட்ரம்ப் மேற்கொள்ளும் முதல் மத்திய கிழக்குப் பயணம் இதுவாகும்.

சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி, அமெரிக்காவுக்கு சவுதி அரேபியாவை விட "உறுதியான நட்புறவு கொண்டோர்கள் வேறு யாரும் இல்லை". சிரியாவுக்கு எதிரான அனைத்துத் தடைகளும் நீக்கப்படும், தற்போது நாடு "சிறந்த வாய்ப்புடன்" முன்னேறவேண்டிய நேரம் இது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (எ-இ)



# பௌர்ணமி தினத்தையொட்டி கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், மே 15

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கண்பரிசோதனை முகாம் யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களினால் மாவட்டச் செயலக வளாகத்தில் சிரமதானப் பணியும் பழைய பூங்கா வளாகத்தில் மர நடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். போதனா மருத்துவமனைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட சிகிச்சை அலகினரால் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்களுக்கான கண் பரிசோதனை நடத்தப்பட்டது. (ச-25,9)

**காணி விற்பனைக்கு**

கைதடி வடக்கு போக்கத்தனையில் தோட்டம் செய்யவும், குடியிருக்கவும் பொருத்தமுள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(CS/52227) J-1
தொடர்பு:- 077 730 4207

# குமுதினிப் படுகொலை; இன்று நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 15

குமுதினி படுகொலையின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நெடுந்தீவில் இன்று பரவலாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

மாவிலித்துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம், மற்றும் தேவசபை ஆலயம் என்பவற்றில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி காலைநெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிச் குமுதினி படகில் பயணித்த 33 தமிழர்கள், நடுக்கடலில் இடைமறிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலைகளே 'குமுதினிப் படுகொலைகள்' என்ற பெயரில் அஞ்சலிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



மண்ணில்
22.05.1956

விண்ணில்
13.05.2025

### அமரர் நாகமணி சிவராமன்

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்-வவுனியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை)

பதுளையைப் பிறப்பிடமாகவும், திருமலை, சுழிபுரம் மற்றும் திருநெல்வேலி தற்போது வவுனியா ஓயார்சின்னக் குளத்தினை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சிவராமன் அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், செந்தில்மணி அவர்களின் அன்புக் கணவரும், செந்தூரன் (N.வைத்திலங்கம் கம்பனி - வவுனியா), லாவண்யா, கோபிராம் (உத்தியோகத்தர் - வவுனியா மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அசோதரன், திலக்ஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பரமேஸ்வரி (கனடா), தேவதாஸ் (ஜேர்மனி), R.N.லோகேந்திரலிங்கம் (நிர்வாக இயக்குனர்-கனடா உதயன் பத்திரிகை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இலட்சுமணசாமி, காலஞ்சென்ற தங்கமலர் (பாப்பா) மற்றும் சாவித்திரி (ஜேர்மனி), பத்மலோசினி (கனடா), காலஞ்சென்ற சந்தானலட்சுமி (கனடா), ஜெகதாம்பிகை (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், கிருத்திக்கின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஓயார் சின்னக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல-12/01, 2ம் ஒழுங்கை,
ஓயார் சின்னக்குளம்,
வவுனியா.

(CR/58251) J-1

தகவல்:
குடும்பத்தினர்.
அசோதரன் (மருமகன்)-074 269 3804
செந்தூரன் (மகன்)-077 611 4257
கோபிராம் (மகன்)-077 698 3460



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.